THE COURT OF THE DISTRICT MUNSIF, TIRUMANGALAM

**DEPOSITION OF WITNESS (D.W. 4)**

Solemnly affirmed and sworn by Tmt.Nagavalli Grade III Bench clerk on 13.12.2023. in accordance with the provisions of Act XX111.

அசல் வழக்கு எண்– 158/2015

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சி.ரவிச்சந்திரன் | தாலுகா | |
| தகப்பனார்/கணவர் பெயர் | | ஊர் | |
| தொழில் | | மதம் | |
| வயது | | | |

பி.வா.சா. 4 முதல் விசாரணை

நான் தற்போது உசிலம்பட்டி வருவாய் கோட்டாட்சியராக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்றத்திலிருந்து வரபெற்ற அழைப்பாணையின் அடிப்படையில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நீதிமன்ற அழைப்பாணையில் சொல்லப்பட்டுள்ள ந.க.எண். 9284/2015/இ3 கோப்பை நீதிமன்றத்திற்கு கொண்டுவந்துள்ளேன். அந்த கோப்புடன் சம்பந்தப்பட்ட ஆவணங்கள் அதில் இணைக்கப்பட்டுள்ளது. மேற்படி ஆவணங்கள் உசிலம்பட்டி வட்டாட்சியர் அலுவலகத்தில் இருந்து பெற்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறேன். ( **மேற்படி கோப்பில் உள்ள உத்தரவு வட்டாட்சியர் அலுவலகத்தில் உள்ள கோப்பு என்பதால் கோட்டாட்சியர் மூலமாக குறியீடு செய்யகூடாது என்று வாதி தரப்பில் ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டது. மேற்படி ஆவணம் அரசு அலுவலகத்தில் இருந்து வரபெற்றுள்ள ஆவணம் என்பதாலும் திருமங்கலம் வட்டாட்சியர் அவர்கள் சாட்சியான உசிலம்பட்டி கோட்டாட்சியரின் கீழ் பணிபுரியக்கூடிய நபர் என்பதாலும் மேற்படி அலுவலகத்திலிருந்து கொண்டுவரபெற்றுள்ள ஆவணம் உசிலம்பட்டி**

**கோட்டாட்சியர் மூலமாக குறியீடு செய்யப்படுகிறது. ந.க.எண். 9284/2015/இ3 கோப்பின் உண்மை நகல் சா.சா.ஆ. 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** )

**<u>குறுக்கு விசாரணை</u>**

என்னால் தாக்கல் செய்யப்பட்டுள்ள கோப்பின் நடவடிக்கைகள் எப்போது நடைபெற்றது என்றால் 2015ம் ஆண்டு ஜீன் மாதம் நடைபெற்றது. மேற்படி ஆவணத்தில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். ஆவணத்தில் கண்ட சர்வே எண் என்ன என்றால் சர்வே எண். 399/3 ஆகும். அதன் விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 16.23 ஏர்ஸ் ஆகும். மேற்படி சொத்து கிராம நத்தத்தில் கட்டுப்பட்டது என்றால் சரிதான். சர்வே எண். 399/3 சொத்தை பொறுத்து நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருந்தால் வருவாய்துறையால் எந்தவிதமான உத்தரவும் பிறப்பிக்க முடியாது என்றால் சரிதான். எனக்கு அனுப்பப்பட்ட அழைப்பாணையில் வழக்கு எண். 158/2015 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். UDRல் ஏற்பட்ட தவறின் காரணமாக பிரதிவாதிகளால் மனு கொடுக்கப்பட்டு அதன் அடிப்படையில் மேற்படி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

UDR தவறு ஏற்பட்டுள்ளதா அல்லது RTR தவறு ஏற்பட்டுள்ளதா என்றால் RTR தவறு ஏற்பட்டு தவறான நபருக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது. அப்போதைய உசிலம்பட்டி வருவாய் கோட்டாட்சியர் மதுரை மாவட்ட வருவாய் அலுவலருக்கு நடவடிக்கை எடுப்பதற்காக கடிதம் அனுப்பியுள்ளார் என்றால் சரிதான். UDR தவறுக்கு வருவாய் கோட்டாட்சியர் நடவடிக்கை எடுக்க முடியாது என்றால் சரிதான். RTR மூலமாக பட்டா மாறுதல் செய்வதில் தவறு ஏற்பட்டிருந்தால் வருவாய் கோட்டாட்சியரே உத்தரவு பிறப்பித்து இருக்கலாம் என்றால் தகவலுக்காக மாவட்ட வருவாய்

அலுவலருக்கு அனுப்பிவிட்டு அதன் பிறகு உத்தரவு பிறப்பிக்கலாம். நான் தாக்கல் செய்துள்ள சா.சா.ஆ 5 ஆவணத்தில் பிரதிவாதிகள் UDR தவறு ஏற்பட்டுள்ளதாகத்தான் மனு கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 08.04.2015ம் தேதி பட்டா மாறுதல் செய்ய ஒரு மனு கொடுத்துள்ளார். அந்த மனுவிற்கு எந்த தேதியில் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் அது பற்றிய ஆவணங்கள் கோப்பில் இல்லை.

கிராம நத்தத்தை பொறுத்து இடத்தில் யார் சுவாதினத்தில் இருக்கிறார்களோ அவருக்குதான் அந்த இடம் பாத்தியம் என்றால் சரிதான். எனக்கு கீழே உள்ள அலுவலகத்திலிருந்து ஆவணங்களை கொண்டுவருமாறு உத்தரவு பிறப்பிக்கவில்லை என்றால் சரிதான். எனது அலுவலகத்தில் ஆவணம் உள்ளதாக சொல்லிதான் பிரதிவாதிகளால் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. (இ.ம.எண்.1/2023 மனுவை சாட்சியிடம் காண்பித்து கேள்வி கேக்கப்பட்டது.) திருமங்கலம் வட்டாட்சியர் உசிலம்பட்டி வருவாய் கோட்டாட்சியருக்கு ஒரு கடிதம் அனுப்பியுள்ளார் என்றால் சரிதான். அதில் என்ன சொல்லப்பட்டுள்ளது என்றால் சர்வே எண். 399/3 சொத்து தவறாக பதிவு செய்யப்பட்டுள்ளது என்று வருவாய் கோட்டாட்சியருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. எதன் அடிப்படையில் தவறாக பதிவு செய்யப்பட்டுள்ளதாக திருமங்கலம் வட்டாட்சியர் சொல்லியுள்ளார் என்றால் வேறு பட்டா மாறுதல் கோப்புக்குரிய RTR எண்ணை தாவா சர்வே எண்ணில் பதிவு செய்து பட்டா மாறுதல் செய்துள்ளதாக சொல்லியுள்ளார்.

நாராயணத்தேவர் பெயரில் உள்ள பட்டா ரத்து செய்யப்படவில்லை என்றால் சரிதான். ரத்து செய்வதற்காக மாவட்ட வருவாய் அலுவலருக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. உசிலம்பட்டி வருவாய் கோட்டாட்சியர்தான் பரிந்துரை செய்துள்ளார் என்றால் சரிதான். தமிழ்நாடு அரசாணை

385/2010 ன் படி UDR தவறு ஏற்பட்டிருந்தால்தான் மாவட்ட வருவாய் அலுவலர் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றாலும் RTR தவறு ஏற்பட்டிருந்தால் வருவாய் கோட்டாட்சியரே நடவடிக்கை எடுக்கலாம் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

பட்டா எண். 1233 ன் அடிப்படையில் பட்டாவில் சொல்லப்பட்டுள்ள நபர்கள்தான் அந்த சொத்தில் அனுபவத்தில் இருக்கிறார்கள் என்றால் சரியல்ல. மேற்படி பட்டா தற்போது நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். சா.சா.ஆ 5 நடவடிக்கையில் யார் யாரை விசாரித்தார்கள் என்று இல்லை என்றால் நரசிம்மன் மகன்கள் சுந்தர் மற்றும் பாஸ்கர், கிராமநிர்வாக அலுவலர் மற்றும் கிராம பொது மக்களிடம் மண்டல துணை வட்டாட்சியர் விசாரணை செய்துள்ளார். பொது மக்களிடம் வாக்குமூலம் பெறப்பட்டுள்ளதா என்றால் பெறப்பட்டுள்ளது. பொது மக்கள் யார் யார் என்றால் வேலுச்சாமி, சின்னச்சாமி மற்றும் பாலசுப்பிரமணியன் ஆகியோர்களிடம் விசாரணை செய்துள்ளார். வேலுச்சாமி, சின்னச்சாமி மற்றும் பாலசுப்பிரமணியன் ஆகியோர்களுக்கும் தாவா சொத்திற்கும் என்ன தொடர்பு என்றால் அவர்கள் அருகே உள்ள நபர்கள் ஆவார்கள். அவர்கள் தாவா சொத்தில் நாராயணத்தேவர் எந்த காலத்திலும் அனுபவத்தில் இல்லை என்று சொல்லியுள்ளார்கள். நாராயணத்தேவரையோ, அவரது வாரிசுகளையோ, வாதிகளையோ அழைப்பாணை கொடுத்து விசாரிக்கவில்லை என்றால் கிராமத்திற்கு சென்று விசாரணை செய்துள்ளார். அழைப்பாணை கொடுக்கவில்லை. எந்த தேதியில் கிராமத்திற்கு சென்று விசாரித்துள்ளார் என்றால் தேதி குறிப்பிடப்படவில்லை. நான் சொன்னதுபோல் எந்தவொரு விசாரணையும் நடைபெறவில்லை என்றாலும் தயார் செய்து கோப்புடன் இணைக்கப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. வாதிகளின் தகப்பனார்

கிருஷ்ணன் பெயரில் பட்டா எண். 1233 வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். நாராயணத்தேவருக்கு கூட்டுப்பட்டா எப்போது வழங்கப்பட்டது என்றால் நாராயணத்தேவர் பெயரில் பட்டா வழங்கப்படவில்லை. அ பதிவேட்டில் அவருடைய பெயர் உள்ளது என்றால் எந்தவிதமான கோப்பும் இல்லாமல் நாராயணத்தேவர் பெயர் அடங்கல் பதிவேட்டில் சேர்க்கப்பட்டுள்ளது. சர்வே எண். 399/3 ல் நாராயணத்தேவரின் மகள் தனலெட்சுமி வீடுகட்டி குடியிருந்து வருகிறார் என்றால் சரியல்ல. பட்டா மாறுதல் மனுவில் முறையாக பட்டாதாரர்களுக்கு அழைப்பாணை அனுப்பி விசாரணை செய்யாமல் உத்தரவு வழங்கப்பட்டுள்ளதால் மேற்படி உத்தரவு செல்லத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

சர்வே எண். 399/3 என்பது UDR க்கு பின்பு ஏற்பட்ட சர்வே எண் என்றால் சரிதான். தாவா சொத்து UDR க்கு முன்பு கள்ளிக்குடி கிராமம் சர்வே எண். 155/5B ல் கட்டுப்பட்டிருந்தது என்றால் சரிதான். சர்வே எண். 155/5B க்கான கோப்புகளை பார்த்தால்தான் யாருடைய அனுபவத்தில் இருந்தது என்று சொல்ல முடியும் என்றால் சரிதான். தனி நபர்களின் வாக்குமூலங்களை வைத்து அனுபவத்தை நிர்ணயம் செய்ய இயலாது என்றால் சரிதான். உரிமையியல் வழக்கு நிலுவையில் இருந்தபோது ஏற்படுத்தப்பட்ட மேற்படி கோப்பு இந்த வழக்கில் எந்தவித தாக்கத்தையும் ஏற்படுத்தாது என்றால் சரியல்ல.